## மண் காக்க, மக்கள் மானம் காக்க உயிர் நீத்த

# தீரன் சின்னமலை நினைவைப் போற்றுவோம்!

**சென்னை, ஆக. 4-**

**மண் காக்க, மக்கள் மானம் காக்க உயர்நீத்த தீரன் சின்னமலை நினைவைப் போற்றுவோம் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதிவு!

ஓடாநிலையில் கோட்டைக் கட்டி ஆண்டு தன் வீரத்தாலும் தியாகத்தாலும் கோடானு கோடி மக்கள் மனதில் நிலைத்திருக்கும் மாவீரர் தீரன் சின்னமலையின் நினைவு நாள் இன்று.

அடிமைத்தனமே தோல்விக்கான தொடக்கப்புள்ளி என ஆதிக்கத்துக்கு அடிபணிய மறுத்து அந்நிய படையை விரட்டியடித்த தன்னிகரில்லா வீரத்துக்குச் சொந்தக்காரர்.

மண் காக்க, மக்கள் மானம் காக்க போரிட்டு உயிர்நீத்த தீரன் சின்னமலை நினைவைப் போற்றுவோம்.

அவர் வழியில் தமிழ் மண்ணில் ஆதிக்கத்தை அடிமைத்தனத்தை வீழ்த்துவோம்!

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# கலைஞர் போல் யாருண்டு?

செங்கோல் ஒரு கையில்
எழுதுகோல் ஒரு கையில்
ஏந்தியே சனாதனம் எதிர்த்திருப்பார்

அரியணை அமர்ந்தாலும்
எதிரணி அமர்ந்தாலும்
தன்மானம் தொலைக்காமல்
துணிந்திருப்பார்

கவி அரங்கம் என்றாலும்
புவி அரங்கம் என்றாலும்
காவியைப் பல காதம் ஓடவைப்பார்


கோட்டையில் இருந்தாலும்
கோபாலபுரம் இருந்தாலும்
காட்சிக்கு எளியனாய் மகிழ வைப்பார்

தொண்டர்கள் வந்தனையோ
எதிரிகள் நிந்தனையோ
எல்லோர்க்கும் அன்பையே
அள்ளிவைப்பார்

உள்நாடு என்றாலும்
வெளிநாடு சென்றாலும்
செம்மொழித் தமிழுக்கே உயர்வளிப்பார்

நண்பர்கள் ஒருபக்கம்
துரோகிகள் மறுபக்கம்
இருந்தாலும் கலங்காமல் செயல் புரிவார்

பூமாலை தோளிலே
முள்கிரீடம் தலையிலே



சுமந்தாலும் ஒய்வின்றி உழைத்திருப்பார்

புகழ்மொழி கேட்டாலும்
இகழ்மொழி கேட்டாலும்
எல்லாமே சமமாக உணர்ந்திருப்பார்

வெற்றிகள் பெற்றாலும்
தோல்விகள் பெற்றாலும்
எப்போதும்வானம்போல்உயர்ந்திருப்பார்

கலைஞர் போல் யாருண்டு?
கலைஞர் வாழ்வார் பல நூற்றாண்டு!!!



**ஆண்டாள் பிரியதர்ஷினி**

## முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள்!

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் அமைதி ஊர்வலம்!

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!


செஞ்சி ஆக 4-

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளில் விழுப்புரம் வடக்கு மாவட்ட முழுவதும்அமைதி ஊர்வலமாக சென்று கலைஞரின்திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதைசெலுத்திடுவீர்,விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ அறிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவில் பல்வேறு குடியரசுத் தலைவர்களையும் பிரதம மந்திரிகளையும் உருவாக்கி சுதந்திர தினத்தில் சட்டமன்றதலைமைச் செயலகத்தில் முதலமைச்சர்களுக்கு தேசிய கொடியினை ஏற்றும் உரிமையை பெற்று தந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாடு அரசின் நிர்வாக வரலாற்றில் பொற்கால ஆட்சியை தந்து விண்ணை முட்டும் சாதனைகளால் தமிழ்நாட்டை வளர்ச்சி பாதைக்கு அழைத்துச் சென்று கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்றி சரித்திரம் படைத்த சாதனை முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினம் ஆகஸ்ட் 7ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது

இதுகுறித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்



பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ தனது அறிக்கையில் கூறுகையில்:

காஞ்சித்தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்கு பின்னால் ஜனநாயக பேரியக்கமான திராவிட முன்னேற்ற கழகத்தை 50 ஆண்டுகாலம் தனது அயராத உழைப்பால் கட்டிக்காத்து திமுக கழகத்தை எஃகு கோட்டையாக்கி கழகத் தொண்டர்களை கண்ணிமை போல் காத்து ஓய்வறியா உழைப்பாளி தாம் போட்டியிட்ட 13 சட்டமன்ற தேர்தலிலும் மகத்தான இமாலய வெற்றி பெற்ற சாதனை நாயகர், 5முறை தமிழக முதலமைச்சராகவும் சிறப்பான முறையில் பார்போற்றும் வகையில் பணியாற்றி தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பின் தங்கிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட எண்ணிலா முற்போக்கு சட்டங்களையும், முன்னோடி திட்டங்களையும் ,நிறைவேற்றி தந்து திராவிட சூரியனாக திகழ்ந்த நம் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவுதினம் ஆகஸ்ட் 7 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. இதைமுன்னிட்டுமாநில மாவட்ட ஒன்றியநகர பேரூர் கழக நிர்வாகிகள் அமைதி ஊர்வலமாக சென்று விழுப்புரம் வடக்கு மாவட்டம்செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதிகள் முழுவதும் உள்ள ஒன்றியம், நகரம், பேரூர் களிலும் அனைத்து ஊராட்சி கிளைகளிலும் நகர பேரூர் வார்டுகளிலும் முத்தமிழ் அறிஞர் கலைஞரின்திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்திட வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கூரை சூர்ய மின்சக்தி நிறுவனத் திட்டத்தை

# தமிழ்நாட்டில் நிறுவ எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

### மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, ஆக. 4-

பிரதமரின் கூரை சூர்ய மின்சக்தி நிறுவனத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்தஒன்றியஅரசு எடுத்தநடவடிக்கைஎன்ன என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதிஉறுப்பினர்சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:-

(அ) பிரதான் மந்திரி சூர்ய கர் முஃப்த் பிஜிலி யோஜனா (PMSGMBY) திட்டத்தின் கீழ் ஏற்பட்ட முன்னேற்றம், மாவட்ட வாரியாக, தமிழ்நாட்டில் முடிக்கப்பட்ட மற்றும் செயல்படுத்தப்பட்டுவரும் கூரை சூரிய மின்சக்தி நிறுவல்களின்எண்ணிக்கைஎவ்வளவு? (ஆ)தமிழ்நாட்டில் மேற்கூறியதிட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்குப் பொருந்தக்கூடிய ஊட்டக் கட்டணம் மற்றும் அது நிகர அளவீடு அல்லது மொத்த அளவீட்டுமாதிரிகள்மூலம் செயல்படுத்தப்படுகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள்,

(இ) டிஸ்காம் ஒப்புதல்களில் தாமதம், விற்பனையாளர் கிடைப்பதில் பற்றாக்குறை அல்லது விழிப்புணர்வு இடைவெளிகள் போன்ற தமிழ்நாட்டிற்கு குறிப்பிட்ட ஏதேனும் செயல்படுத்தல் சவால்கள் அல்லது தடைகளை அரசாங்கம் கண்டறிந்துள்ளதா?

(ஈ) அப்படியானால், தமிழ்நாட்டில் கிராமப்புற மற்றும்நகர்ப்புறவீடுகளில் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதை விரைவுபடுத்தவும், திறம்பட செயல்படுத்துவதை உறுதி செய்யவும் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?

(உ) தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தை சரியான நேரத்தில் செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள்,பயன்பாட்டின் எளிமை, மின் இணைப்பு மற்றும் பொது விழிப்புணர்வு பிரச்சாரங்கள் உட்பட என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய எரிசக்தித்துறைஇணைஅமைச்சர் விரிவாகபதிலளித்துள்ளார்.

## தி.மு.க. இலக்கிய அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர் நியமனம்!

## தி.மு.க.இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு

### மதுரை மாநகர் மாவட்டம்

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி அமைப்பாளராக **திரு. பி.ஆர். ராஜா** (34/52, பாய் காம்பவுண்ட், அகிம்சாபுரம் 6வது தெரு, செல்லூர், மதுரை - 625002) அவர்கள் நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### கடலூர் மேற்கு மாவட்டம்

கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி துணை அமைப்பாளராக **திரு. சோழன் எம்.எஸ். சம்சுதீன்** (81, மாரியம்மன் கோயில் தெரு, புதுப்பேட்டை, விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்.) அவர்கள் நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02-08-2025.

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து மதுரை மாவட்டம் ஒத்தக்கடை அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ திட்டத்தின் கீழ் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்து திட்ட அரங்கினை பார்வையிட்டு காச நோயாளிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஊட்டச்சத்து உணவு பெட்டகத்தையும் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு நவீன செயற்கை கால்களையும் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மற்றும் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் அ.பா.ரகுபதி, வீரராகவன், வக்கில் கலாநிதி, பாலாண்டி, வடிவேல்முருகன், ஒத்தக்கடை சரவணன், அண்ணாமலை, மதிவாணன், ரவிச்சந்திரன், மகுடபதி உள்ளிட்ட கழகத்தினர், பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.

# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!



### 1 – 8 – 2025 நிகழ்வுகள்!

1. **உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிக்கொல்லி பயன்பாடு தடுப்பு நடவடிக்கை என்ன?**

**பொள்ளாச்சி – கே. ஈஸ்வரசாமி கேள்வி**



உணவு தானியங்கள், காய்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றில் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதால் உடல்நலத்திற்கு தீங்கு விளைகிறது என்பதை சுட்டிக்காட்டி திமுக பொள்ளாச்சி மக்களவை தொகுதி உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

பூச்சிக்கொல்லிகள் கொண்ட உணவு தானியங்கள் மற்றும் நீர் மற்றும் காற்று மாசுபடுவதால் அனைத்து வகையான பறவைகளின் எண்ணிக்கையும் மெதுவாகக் குறைந்து வருகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இந்த சூழ்நிலையை சரிசெய்ய அரசாங்கம் மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கை என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

3. **இலவச மருந்துகள் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் திட்டங்களை அமுல்படுத்துமா ஒன்றிய அரசு?**

**காஞ்சிபுரம்–ஜி.செல்வம் மற்றும் சி. என். அண்ணாதுரை கேள்வி**



தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ் நாடு முழுவதும் அரசு இலவச மருத்துவ பரிசோதனை முகாம்கள் மற்றும் மருந்து சேவையை தொடங்கும் திட்டங்கள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் ஜி. செல்வம் மற்றும் சி. என். அண்ணாதுரை நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர். அதன் விவரங்கள் பின்வருமாறு.

இத்திட்டங்களின்கீழ் பொது சுகாதார நிலையங்களில் இலவசமாக வழங்கக்கூடிய அத்தியாவசிய மருந்துகள் மற்றும் நோய் கண்டறிதல் சோதனைகளின் எண்ணிக்கை என்ன?

துணை சுகாதார மையங்கள் (SHCs), ஆரம்ப சுகாதார மையங்கள் (PHCs), சமூக சுகாதார மையங்கள் (CHCs), துணை மாவட்ட மருத்துவமனைகள் (SDHs) மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் இந்த முயற்சிகளை தமிழ்நாடு அரசு எந்த அளவிற்கு செயல்படுத்தியுள்ளது என்கிற விவரங்கள்?

தமிழ்நாட்டில் உள்ள பொது சுகாதார வசதிகளில் அத்தியாவசிய மருந்துகள் தடையின்றி கிடைப்பதையும், நோயறிதல் சேவைகள் சரியான நேரத்தில் வழங்கப்படுவதையும் உறுதி செய்வதற்கு மத்திய அரசிடம் ஏதேனும் கண்காணிப்பு வழிமுறை உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இலவச மருந்துகள் மற்றும் நோயறிதல்களை மேம்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டில் நோயாளிகளின் செலவினத்தை மேலும் குறைக்க ஒன்றிய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் யாவை?

4. **விளிம்புநிலை மக்களுக்கான இலவச சட்ட உதவி வழங்க நடவடிக்கை என்ன?**

**சி.என். அண்ணாதுரை கேள்வி**



எஸ்.சி./எஸ்.டி, பெண்கள் மற்றும் பிற விளிம்புநிலை சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவச சட்ட உதவி வழங்குவதற்காக அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் நிறுவனங்க ளின் விவரங்களை திருவண்ணாமலை திமுக மக்களவை உறுப்பினர் சி. என். அண்ணாதுரை கேட்டுள்ளார்.

அரசு இவ்வாறு சட்ட உதவிகள் வழங்குகிறது என்பது குறித்த் விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

கடந்த மூன்று ஆண்டுகளில் தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தால் (NALSA) எடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் சட்ட உதவி வழங்கப்பட்ட எண்ணிக்கை என்ன?

NALSA உள்ளிட்ட சட்ட சேவைகள் ஆணையங்களின் செயல்திறன் மற்றும் செயல்பாட்டைக் கண்காணிக்கவும் மதிப்பிடவும் அரசு ஒரு வழிமுறையை வகுத்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் நாடு முழுவதும், குறிப்பாக தமிழ்நாட்டில் இலவச சட்ட உதவி வழங்கலை வலுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

5. **தரமற்ற மருந்து உற்பத்தியாளர்களுக்கு தண்டனை என்ன?**

**வேலூர் – கதிர் ஆனந்த் கேள்வி!**



தர சோதனைகளில் தரமற்றவை என அறிவிக்கப்பட்ட மருந்து நிறுவனங்களுக்கு எதிராக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட எச்சரிக்கை நடவடிக்கை மற்றும் தண்டனை நடவடிக்கைகள் என்ன என வேலூர் திமுக மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பியுள்ளார்.

‘நிலையான தரம் இல்லாத’ (NSQ) மருந்துகளை உற்பத்தி செய்யும் மருந்து நிறுவனங்கள் காளான்களாக பெருகி வருவது குறித்து அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) அரசு ஆய்வகங்களால் ‘நிலையான தரம் இல்லாத’ (NSQ) மருந்துகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் தயாரிப்பு உரிமங்களை உடனடியாக நிறுத்தி வைப்பதாக அறிவித்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

6. **விளிம்புநிலை மக்களுக்கான இலவச மருத்துவ உதவி வழங்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?**

**கள்ளக்குறிச்சி டி.மலையரசன் கேள்வி**



பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கியுள்ளவர்கள், எஸ்.சி/எஸ்.டி மக்களுக்கு மருத்துவ உதவிகள் மற்றும் மருத்துவம் தொடர்பான பொருளாதார உதவிகள் வழங்கும் திட்டமான ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் (ABDM) திட்டத்தின் தற்போதைய நிலை என்ன என கள்ளக்குறிச்சி திமுக எம்.பி. டி. மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ்நாடு மாநிலத்தில் இன்றுவரை ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்கின் (ABHA)கீழ் பதிவுசெய்யப்பட்ட மொத்த குடிமக்களின் எண்ணிக்கை என்ன?

ABDMஇன் கீழ் கிராமப்புற சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார வசதிகளின் டிஜிட்டல் உள்கட்டமைப்பு செயல்நிலை குறித்தும் அரசாங்கம் நடத்தியுள்ள ஆய்வுகள் என்ன?

தரவு தனியுரிமை, சைபர் பாதுகாப்பு அல்லது ABDM சுற்றுச்சூழல் அமைப்பின் கீழ் குடிமக்களின் சுகாதாரத் தரவை தவறாகப் பயன்படுத்துவது குறித்து நிபுணர்களால் எடுத்துக்கூறப்பட்ட பிரச்சினை களை அரசு கணக்கில் எடுத்துள்ளதா?

அப்படியானால், இந்த பிரச்சி னைகளுக்கு தீர்வாக அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட/முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் ABDM கட்டமைப்பின் கீழ் குடிமக்களின் தரவு பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?